2117

# மாகாணக் கல்வித் திணைக்களம்

## வட மாகாணம்

## மாகாணமட்ட இரண்டாந் தவணைப்பரீட்சை – 2016

## தமிழ்மொழியும் இலக்கியமும்

தரம் - 09 நேரம் :- 02 மணி

சுட்டெண் :........................................ புள்ளி :-

பகுதி I

**மிகப்பொருத்தமான விடையின் கீழ்க் கோடிடுக.**

1. பௌராணிகரின் கதைகளில் வருவதைப் போன்று...... இங்கு பௌராணிகர் என்பதன் ஒத்த சொல்
   - i. கோவிலில் பூசை செய்வோர்
   - ii. புராணக்கதையை பிரசங்கம் செய்வோன்
   - iii. ஊரில் உள்ள மூத்த உறுப்பினர்
   - iv. நல்லது கெட்டது தெரிந்த பெரியார்

2. சீமை தொரைகளெல்லாம் சிரிக்கிறாக சன்னலிலே. இங்கு சீமை என்பதை குறிக்கும் சொல்.
   i. உள்நாடு ii. சொந்த ஊர் iii. வெளிநாடு iv. பக்கத்து ஊர்

Education கல்வி අධ්‍යාපන

3. கீர்த்தி கொள் போகப் பொருட்புவியே! இங்கு கீர்த்தி என்பதன் எதிர்ப்பதம்
   i. அபகீர்த்தி ii. புகழ் iii. வெற்றி iv. நன்மை

4. கந்தனுக்கும் பாலனுக்கும் பிணக்கம் ஏற்பட்டது. பிணக்கம் என்பதன் எதிர்ப்பதம்
   i. சுணக்கம் ii. இணக்கம் iii. விளக்கம் iv. ஈடுபாடு

5. ஊமை கண்ட கனவு. கனவு என்பதன் எதிர்ப்பதம்.
   i. நினைவு ii. நனவு iii. உணவு iv. சொப்பனம்

**மிகச்சரியான விடையைத் தெரிவுசெய்து அதன் கீழ்க் கோடிடுக.**

6. கூட்டுயிர் எழுத்துக் கூட்டம்
   i. ஐ, ஔ ii. ஆ, அ iii. ஒ, ஓ iv. எ,

7. அரைப்புள்ளி அல்லது தொடரிசைக்குறியின் குறியீடைக் குறிப்பது.
   i. , ii. : iii. ; iv. ‘’

8. வேற்றுநிலை மெய்மயக்கமாக மட்டும் வரும் மெய்யெழுத்துக்கள்
   i. ர், ம் ii. க், ச் iii. ங், ஞ் iv. ட், ண்



kalvi.lk

9. நித்தாட்டு என்ற சொல்லின் எழுத்து வழக்கு.

i. பின்னர் ii. கொஞ்சம் iii. சுழன்று iv. நிறுத்துக

10. வண்ணமயமான தோட்டத்தில் இன்பமாக விளையாடினோம். இதில் வந்துள்ள பெயரடைமொழி

i. தோட்டம் ii. வண்ணமயமான iii. இன்பமாக iv. விளையாடினோம்

11. சாம்பர் என்பது

i. கடைப்போலி ii. முதற்போலி iii. இடைப்போலி iv. போலியன்

12. வெட்டவெளி என்பது

i. இரட்டைக்கிளவி
ii. அடுக்குத்தொடர்
iii. அடுக்கிடுக்குத்தொடர்
iv. தொடர் மொழி

13. பழம்பாட்டு என்பதை பிரித்து எழுதினால்

i. பழம் + பாட்டு
ii. பழமை + பாட்டு
iii. பழ + பாட்டு
iv. பழசு + பாட்டு

14. வேதம், இரகசியம், அடையாளம் என்ற பலபொருள் குறிக்கும் ஒரு மொழியானது

i. மறை ii. குறி iii. சமயம் iv. குறியீடு

15. மண்வெட்டி என்பது

i. இடுகுறிப்பெயர் ii. காரணப்பெயர் iii. காரண இடுகுறிப்பெயர் iv. இயல்புப் பெயர்

16. செப்பேட்டிலேனும் கல்விலேனும் செதுக்கப்படும் புகழ் மொழி

i. மெய்கீர்த்தி ii. கல்வெட்டு iii. சாசனம் iv. உறுத

17. வயிறு குளிர்தல் எனும் மரபுத்தொடர் குறிப்பது

i. உய்வடைதல் ii. துன்பத்தில் காத்தல்
iii. தீமை செய்தல் iv. திருப்தியடைதல்

18. Scan என்பதன் தமிழ் வடிவம்

i. வருடி ii. அச்சுக்கருவி iii. இரட்டிப்பு iv. வனப்புக்கள்

19. அறுபதாவது ஆண்டில் எடுக்கப்படும் விழா

i. முத்து விழா ii. பவள விழா iii. வைர விழா iv. தகரவ

20. பின்வரும் வாக்கியங்களை ஒழுங்கமைத்து பந்தி ஒன்று ஆக்கப் பொருத்தமான வைப்பு முறையின் கீழ் கோடிடுக.

அ) அத்தகைய வளம் மிக்க பிரதேசத்திலே தவமுனிவர் சேரி ஒன்றிருந்தது.

ஆ) அது வயலும் வாவிகளும் நிறைந்துள்ள நீர்வளப் பிரதேசம்

இ) அம்முனிவர் சேரியிலே குசேலர் பிறந்தவர்

ஈ) தமிழகத்தின் வடமதுரையை அடுத்து அமைந்துள்ள நகரம் அவந்தி

உ) அவரிடம் சிறந்த பழக்கவழக்கங்கள் பல நிறைந்திருந்தன

i. ஈ, உ, அ, இ, ஆ ii. அ, இ, ஆ, உ, ஈ iii. அ, ஆ, உ, ஈ, இ iv. ஈ, ஆ, அ,



kalvi.lk

## பகுதி – II

**அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.**

1) உமது வகுப்பறையில் மேற்கொண்ட செயற்பாடு தொடர்பாக பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.

1. நீர் வகுப்பறையில் மேற்கொண்ட ஒப்படைக் கணிப்பீட்டின் தலைப்பு யாது ?
2. அவ் ஒப்படையினை மேற்கொள்ள எவ்வாறு தகவல்களைப் பெற்றுக் கொண்டீர்?
3. தகவல்களைச் சேகரிக்க உமக்கு ஏற்பட்ட பிரச்சினை யாது?
4. ஒப்படைக் கணிப்பீட்டுக்கு ஆசிரியரால் உமக்கு வழங்கப்பட்ட நியதிகள் எவை?
5. இக் கணிப்பீட்டை மேற்கொண்டதன் மூலம் உமக்கு ஏற்பட்ட நன்மைகள் யாது? **(5X2=10புள்ளிகள்)**

2) பின்வரும் தலைப்புக்களில் ஒன்றைத் தெரிவு செய்து 150 சொற்களுக்குக் குறையாமல் எழுதுக.

1. வாசிப்பின் மேன்மை
2. சுற்றுப்புறச்சூழலைப் பாதுகாப்போம்
3. விஞ்ஞானத்தின் வளர்ச்சி
4. எமது நாட்டில் மும்மொழிக்கல்வியின் அவசியம் **(20புள்ளிகள்)**

3) பின்வருவன ஒன்றைப் பற்றி 75 சொற்களுக்கு குறையாமல் கடிதம் எழுதுக.

1. உமது பாடசாலையில் நடைபெற்ற பரிசளிப்பு விழா பற்றி விபரித்து நண்பனுக்கு ஓர் கடிதம்
அல்லது
2. ‘ நீரை வீண்விரயம் செய்யாது இருப்போம் ’ எனும் தலைப்பில் ஒரு துண்டுப்பிரசுரம் **(15 புள்ளிகள்)**

4) பின்வரும் பாடலை வாசித்து வினாக்களுக்கு விடை தருக.

தமிழ்க்குத் தமிழ்மொழியிற் சுவடிச்சாலை
சர்வகலா சாலையைப் போல எங்கும் வேண்டும்
தமிழிலிலாப் பிறமொழிநூல் அனைத்தும் நல்ல
தமிழாக்கி வாசிக்கத் தருதல் வேண்டும்
அமுதம் போல் செந்தமிழிற் கவிதைநூல்கள்
அழகியவாம் உரைநடையில் அமைந்த நூல்கள்
சுமைசுமையாய்ச் சேகரித்துப் பல்கலைசேர்
துறைதுறையாய்ப் பிரித்தடுக்கி வைத்தல் வேண்டும்

- பாரதிதாசன் -

1. இப்பாடல் எதனை வலியுறுத்துகின்றது?
2. ‘சுவடிச்சாலை’ என்பதன் பொருள் யாது?
3. எவ்வகை நூல்கள் அங்கு இடம்பெற வேண்டுமென குறிப்பிடப்பட்டுள்ளது.
4. ‘சுமை சுமையாய்ச் சேகரித்தல்’ எனும் தொடரின் சிறப்பினை விளக்குக.
5. இப்பாடலைப் பாடிய கவிஞனின் மனோநிலை யாது? **(5X2=10புள்ளிகள்)**



Education கல்வி அධ්‍යාපන
kalvi.lk

5) விடை எழுதுவோம்.

1. முதலைகள் வேட்டையாடப்படுவதற்கான காரணம் யாது?
2. ஈழத்தமிழன்னை தந்த இருமணிகளும் யாவர்?
3. ஊக்கமுடைமை எனப்படுவது யாது?
4. பொய்கையில் காதணியைத் தொலைத்த மங்கை அதனை ஏன் அன்னப்பெடையிடம் முறையிட்டாள்?
5. கிருஸ்ணர் குசேலரை எவ்வாறு உபசரித்தார்?

**(5X3=15புள்ளிகள்)**

6) சந்தர்ப்பம் கூறுக.

1. "இங்க பாரும், நான் ஒண்ணும் ஆதாரமில்லாம பேசமாட்டேன்"

யாரால்:-

யாருக்கு :-

சந்தர்ப்பம் :-

2. "பந்தனை அகற்ற மேலாய் பற்பல நாட்குப் பின்பு வந்தனை எனக்கு என் கொண்டு வந்தனை"

யாரால்:-

யாருக்கு :-

சந்தர்ப்பம் :-

**(2X2=4புள்ளிகள்)**

7) பொருத்தமான இரட்டைக்கிளவியைப் பயன்படுத்திக் கீறிட்ட இடங்களை நிரப்புக.

திருதிரு , கலீரகலீர் , சலசல , படபட , பொலபொல , கமகம

1. பாதச்சிலம்பு ................................ என ஒலிக்க மங்கை நடனமாடினாள்.
2. குற்றம் செய்தவன் ...................................... என விழித்தான்.
3. அச்சத்தால் நெஞ்சம்...................................... என அடித்துக் கொண்டது.
4. கண்களிலிருந்து ................................... என கண்ணீர் சொரிந்தது.
5. ஆற்றுநீர்......................................... என ஓடியது.
6. ...................................... என நறுமலர்கள் மணம் வீசியது.

**(6X1=6புள்ளிகள்)**



kalvi.lk

May

## ONLINE CLASSES - 2025

# NEW ADMISSIONS

# 2ம் தவணை வகுப்புகள்

**தரம் 6 முதல் O/L வரை**

**அனைத்து பாடங்களும் ஒரே கல்வி நிறுவனத்தின் கீழ் ...**

இலங்கையின் எப்பாகத்திலிருந்தும் ZOOM APP மூலம் எமது வகுப்புகளில் இணைந்து கொள்ள முடியும்.



**JOIN NOW**

WWW.KALVI.LK

**075 287 1457**